ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2298/32 - 2022 සැප්තැම්බර් මස 22 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.09.22

*2298/32 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்

*ச. வ. பி. 3/2013* (ii)

**1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டம்**

*1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 139 ஆம் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் சொல்லப்பட்ட 321 ஆம் பிரிவின்கீழ் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்கவிதிகள்.*

**நிமல் சிறிபால டி சில்வா,**
துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும்
விமானசேவைகள் அமைச்சர்.

கொழும்பு,
*2022, செத்தெம்பர் 19.*

**ஒழுங்குவிதிகள்**

1. (1) இவ்வொழுங்குவிதிகள் 2022 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் (கடலோரக் காப்பை அதிகரிப்பதற்கான விசேட வழிமுறைகள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

(2) இவ்வொழுங்குவிதிகளின் நோக்கமானது, 1974 ஆம் ஆண்டின் கடலில் உயிர்காப்புக்கான சர்வதேசச் சமவாயத்தின் அத்தியாயம் XI-I இன்கீழான குறித்த சில ஒழுங்கு விதிகளுக்கும், காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் வரைவாவணத்துக்கும், அத்தகைய வரைவாவணத்துக்குச் செய்யப்பட்ட அடுத்துப்பின்னரான ஏதேனும் திருத்தத்துக்கும் பயன்கொடுப்பதாதல் வேண்டும்.

## பாகம் I

### இவ்வொழுங்குவிதிகளின் ஏற்புடையனவாந்தன்மை

2. (1) இவ்வொழுங்குவிதியின் உபஒழுங்குவிதி (2) இன் ஏற்பாடுகளுக்கமைய, இவ்வொழுங்குவிதிகள், எங்கு இருப்பினும் இலங்கைக் கொடியைப் பறக்கவிடுவதற்கு உரித்துடைய கப்பல்களுக்கும் வேறெவையேனும் வெளிநாட்டுக் கப்பல்கள் இலங்கை நீர்ப்பரப்புகளில் இருக்கையில் அவற்றுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதிகள் பின்வருவனவற்றுக்கு ஏற்புடையனவாதலாகாது :-

(அ) போர்க்கப்பல்களுக்கும் படைக்குழுவினர் கப்பல்களுக்கும் ;

(ஆ) பொறிமுறை வழிவகைகள்மூலம் உந்தப்படாத கப்பல்களுக்கும்;

(இ) தொன்மையான கட்டமைப்பைக் கொண்ட மரக்கப்பல்களுக்கும் ;

(ஈ) வியாபாரத்தில் ஈடுபட்டிராத பொழுதுபோக்கு உலாப்படகுகளுக்கும் ; அத்துடன்

(உ) மீன்பிடிக் கலன்களுக்கும்.

## பாகம் II

### விசேட வழிமுறைகள்

3. 2261/49 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2021 வணிகக் கப்பற்றொழில் (ஆய்வுகளும் சான்றிதழ்களும்) ஒழுங்குவிதிகள் ஏற்புடையனவாகவுள்ள தொகையாக ஏற்றிச்செல்லும் கப்பல்களும் எண்ணெய்த் தாங்கற்கலன்களும், ஒழுங்கமைப்பினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அதனால் திருத்தப்படக்கூடியவாறாக 2011 ஆம் ஆண்டின் தொகையாக ஏற்றிச்செல்லும் கப்பல்கள் மற்றும் எண்ணெய்த் தாங்கற்கலன்களின் ஆய்வுகளின்போது சோதனைகளின் அதிகரித்த நிகழ்ச்சித்திட்டத்தின்மீதான சர்வதேசச் சட்டக்கோவைக்கிணங்க (2011 ஆம் ஆண்டின் அதிகரித்த ஆய்வுகள் நிகழ்ச்சித்திட்டச் சட்டக்கோவை) சோதனைகளின் அதிகரித்த நிகழ்ச்சித்திட்டத்துக்கு அமைந்தனவாக்கப்படுதல் வேண்டும்.

4. (1) நூறு முழுமொத்தத் தொன்னளவையும் அதற்கு மேற்பட்டதையும் கொண்ட எல்லாப் பயணிக் கப்பல்களுக்கும் மற்றும் முந்நூறு முழுமொத்தத் தொன்னளவையும் அதற்கு மேற்பட்டதையும் கொண்ட எல்லாச் சரக்குக் கப்பல்களுக்கும், ஒழுங்கமைப்பினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேசக் கப்பல் அடையாளங்காணல் IMO இலக்கத் திட்டத்திற்கு இசைந்தொழுகுகின்ற அடையாளங்காணல் இலக்கமொன்று வழங்கப்படுதல் வேண்டும்.

(2) (அ) கப்பலின் அடையாளங்காணல் இலக்கம், 2261/49 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட (இவ்வொழுங்குவிதிகளில் "சமவாயம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2021 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (ஆய்வுகளும் சான்றிதழ்களும்) ஒழுங்குவிதிகள் ஏற்புடையனவாகவுள்ள கப்பல்களுக்காக 1974 ஆம் ஆண்டின் கடலில் உயிர்காப்புக்கான சர்வதேசச் சமவாயத்தின் அத்தியாயம் I இன் 12 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் அல்லது அத்தியாயம் I இன் 13 ஆம் ஒழுங்குவிதியின்கீழ், 1988 ஆம் ஆண்டின் வரைவாவணத்தின்கீழ், சமவாயத்தின் அத்தியாயம் IX இன் 4 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் ISPS (சர்வதேசக் கப்பல் மற்றும் துறைமுக வசதிப் பாதுகாப்புச்) சட்டக்கோவையின் பிரிவு A/19.2 அல்லது A/19.4 இன்கீழ் வழங்கப்பட்ட சான்றிதழ்களின்மீதும் அவற்றின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளின்மீதும் இடப்படுதல் வேண்டும்.

(ஆ) கப்பலின் அடையாளங்காணல் இலக்கம், 2022 ஆம் ஆண்டின் சனவரி மாதம் 06 ஆந் திகதிய வர்த்தமானியில் வெளியிடப்பட்ட வணிகக் கப்பற்றொழில் (ஆய்வுகளும் சான்றிதழ்களும்) ஒழுங்குவிதிகள் ஏற்புடையனவாகாத கப்பல்களுக்காக வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஏற்புடையற்பாலனவான நியதிச்சட்டச் சான்றிதழ்களின்மீதும் அவற்றின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளின்மீதும் இடப்படுதல் வேண்டும்.

(3) கப்பலின் அடையாளங்காணல் இலக்கம் பின்வருமாறு நிரந்தரமாகக் குறியிடப்படுதல் வேண்டும்:-

(அ) ஒன்றில் கப்பலின் பிற்புறத்தின்மீது அல்லது கப்பலின் உடற்பகுதியின் இருபக்கங்களின்மீதும், கப்பலின் நடுவில் இடதுபக்கத்தினதும் அல்லது வலது பக்கத்தினதும் மீதும், மிக்க ஆழமான குறித்தளிக்கப்பட்ட சுமைவரையின்மேல் அல்லது மேற்கட்டுமானத்தினதும், இடதுபக்கத்தினதும் வலதுபக்கத்தினதும் இருபக்கங்களின்மீதும் அல்லது

மேற்கட்டுமானத்தின் முற்புறத்தின்மீதும் புலப்படத்தக்கவோர் இடத்திலும் அல்லது, பயணிக் கப்பல்களின் விடயத்தில், வான்பரப்பிலிருந்து புலப்படத்தக்க ஒரு கிடையான மேற்பரப்பிலும்; அத்துடன்

(ஆ) ஒன்றில் சமவாயத்தின் அத்தியாயம் II-2 இன் 3.30 ஆம் ஒழுங்குவிதியில் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறு, எந்திரத்தொகுதி இடைவெளிகளின் முடிவுக் குறுக்கீட்டுக் காப்புத்தடுப்புகளில் ஒன்றின்மீது, அல்லது புகுவாயில்களில் ஒன்றின்மீது அல்லது, தாங்கற்கலன்களின் விடயத்தில், பம்பி அறையில் அல்லது, வாகனச்சில்லினால் ஏற்றியிறக்கப்படக்கூடிய வாகனங்களை ஏற்றிச்செல்கின்ற இடங்களைக்கொண்ட கப்பல்களின் விடயத்தில், சமவாயத்தின் அத்தியாயம் II-2 இன் 3.41 ஆம் ஒழுங்குவிதியில் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறு, வாகனச்சில்லினால் ஏற்றியிறக்கப்படக்கூடிய வாகனங்களை ஏற்றிச்செல்கின்ற இடங்களின் முடிவுக் குறுக்கீட்டுக் காப்புத்தடுப்புகளில் ஒன்றின்மீது இலகுவாக அணுகத்தக்கவோர் இடத்திலும்.

(4) நிரந்தரக் குறியிடுதலானது, தெளிவாகப் புலப்படத்தக்கதாகவும், கப்பலின் உடற்பகுதியில் வேறெவையேனும் குறியீடுகளிலிருந்து தனிப்பட்டதாகவும், வேற்றுநிறத்தில் பூச்சிடப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.

(5) உப ஒழுங்குவிதி 3 (அ) வில் குறிப்பீடுசெய்யப்பட்ட நிரந்தரக் குறியீடு, உயரத்தில் 200 மீற்றருக்குக் குறைவிருத்தலாகாது. பந்தி 3 (ஆ) வில் குறிப்பீடுசெய்யப்பட்ட நிரந்தரக் குறியீடு, உயரத்தில் 100 மீற்றருக்குக் குறைவிருத்தலாகாது, குறியீடுகளின் அகலம் உயரத்துக்கு விகிதாசாரமாகவிருத்தல் வேண்டும்.

(6) நிரந்தரக் குறியீடு, உயர்த்தப்பட்ட எழுத்திலிடுதல் மூலம் அல்லது அதனை உள்ளே வெட்டுவதன் மூலம் அல்லது அதனை நடுவில் துளையிடுவதன் மூலம் அல்லது குறியிடுதலானது இலகுவாக அழிக்கப்படாதிருப்பதனை உறுதிப்படுத்துகின்ற கப்பல் அடையாளங்காணல் இலக்கத்தைக் குறியிடுதலுக்கான வேறேதேனும் சமமான முறைமூலம் செய்யப்படலாம்.

(7) உருக்கு அல்லது உலோகம் தவிர்ந்த பொருளினால் நிர்மாணிக்கப்பட்ட கப்பல்களின்மீது, (இவ்வொழுங்குவிதிகளில் "பணிப்பாளர் தலைமையதிபதி" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) வணிகக் கப்பற்றொழில் பணிப்பாளர் தலைமையதிபதி கப்பல் அடையாளங்காணல் இலக்கத்தைக் குறியிடும் முறையை அங்கீகரித்தல் வேண்டும்.

(8) இரண்டாயிரத்தைந்தாம் ஆண்டு யூலை 1 ஆந் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் நிர்மாணிக்கப்பட்ட கப்பல்களில் கொண்டுசெல்லப்படுவதற்குப் பல்வேறு சர்வதேசக் கடலோர ஒழுங்கமைப்புச் சமவாயங்களினால் தேவைப்படுத்தப்பட்ட எல்லா வரைபடங்களும், கைந்நூல்களும் மற்றும் வேறு ஆவணங்களும் தெளிவான, வாசிக்கத்தக்க மற்றும் பொருள்மயக்கமற்ற முறையில் கப்பலின் அடையாளங்காணல் இலக்கத்துடன் குறியிடப்படுதல் வேண்டும்.

5. (1) 2261/49 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2021 வணிகக் கப்பற்றொழில் (ஆய்வுகளும் சான்றிதழ்களும்) ஒழுங்குவிதிகள் ஏற்புடையனவாகவுள்ள ஒவ்வொரு கம்பெனிக்கும் ஒரு கப்பலின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரருக்கும், ஒழுங்கமைப்பினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேசக் கடலோர ஒழுங்கமைப்பு IMO தனித்துவமான கம்பெனி மற்றும் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் அடையாளங்காணல் இலக்கத் திட்டத்துக்கு இசைந்தொழுகுகின்ற அடையளங்காணல் இலக்கமொன்று வழங்கப்படுதல் வேண்டும்.

(2) கம்பெனி அடையாளங்காணல் இலக்கம், சமவாயத்தின் அத்தியாயம் IX இன் 4 ஆம் ஒழுங்குவிதியின்கீழும் சர்வதேசக் கப்பல் மற்றும் துறைமுக வசதிப் பாதுகாப்புச் சட்டக்கோவையின் பிரிவு A/19.2 அல்லது A/19.4 இன்கீழும் வழங்கப்பட்ட சான்றிதழ்களின் மீதும் அவற்றின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளின் மீதும் இடப்படுதல் வேண்டும்.

6. (1) 2261/49 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2021 வணிகக் கப்பற்றொழில் (ஆய்வுகளும் சான்றிதழ்களும்) ஒழுங்குவிதிகள் ஏற்புடையனவாகவுள்ள ஒவ்வொரு கப்பலும் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட தொடர்ச்சியான பொருட்சுருக்கப் பதிவேடொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) (ஆ) தொடர்ச்சியான பொருட்சுருக்கப் பதிவேடு, அதன்கண் பதியப்பட்ட தகவல் தொடர்பில் கப்பலின் வரலாறு பற்றிய கப்பலின் மீதான பதிவேடொன்றை வழங்குதல் வேண்டும்.

(ஆ) இரண்டாயிரத்து நான்காமாண்டு யூலை, 1 ஆந் திகதிக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட கப்பல்களுக்காக, தொடர்ச்சியான பொருட் சுருக்கப் பதிவேடு, ஆகக்குறைந்தது, 2004, யூலை 1 ஆந் திகதியிலிருந்தவாறு கப்பலின் வரலாற்றை வழங்குதல் வேண்டும்.

*(3)* உபஒழுங்குவிதி *(1)* இல் குறிப்பீடுசெய்யப்பட்ட தொடர்ச்சியான பொருட் சுருக்கப் பதிவேடு, ஆகக்குறைந்தது, பின்வரும் தகவலைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) கப்பலானது எந்த அரசின் கொடியைப் பறக்கவிடுவதற்கு உரித்துள்ளதோ அந்த அரசின் பெயர்;

(ஆ) கப்பலானது எத்திகதியன்று அவ்வரசுடன் பதிவுசெய்யப்பட்டதோ அத்திகதி;

(இ) 5 ஆம் ஒழுங்குவிதிக்கிணங்கக் கப்பலின் அடையாளங்காணல் இலக்கம்;

(ஈ) கப்பலின் பெயர்;

(உ) கப்பல் எந்தத் துறைமுகத்தில் பதிவுசெய்யப்படுகின்றதோ அந்தத் துறைமுகம்;

(ஊ) பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரரின் பெயரும் அத்தகைய சொந்தக்காரரின் பதிவுசெய்யப்பட்ட முகவரியும்;

(எ) பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரரின் அடையாளங்காணல் இலக்கம் ;

(ஏ) ஏற்புடையதாயின், பதிவுசெய்யப்பட்ட வெற்றுப்படகு வாடகைக்கமர்த்துநரின் பெயரும் அத்தகைய வாடகைக்கமர்த்துநரின் பதிவுசெய்யப்பட்ட முகவரியும்;

(ஐ) கம்பெனியின் பெயரும், காப்பு முகாமைத்துவச் செயற்பாடுகளை அது எப்பதிவுசெய்யப்பட்ட முகவரியிலிருந்து நிறைவேற்றுகின்றதோ அப்பதிவுசெய்யப்பட்ட முகவரியும் ;

(ஒ) கம்பெனி அடையாளங்காணல் இலக்கம் ;

(ஓ) கப்பலானது எந்த வகுப்பாக்கச் சங்கங்களுடன் வகுப்பாக்கஞ்செய்யப்படுகின்றதோ அந்த எல்லா வகுப்பாக்கச் சங்கங்களினதும் பெயர்கள்;

(ஔ) கப்பலைத் தொழிற்படுத்துகின்ற கம்பெனிக்கு, சமவாயத்தின் அத்தியாயம் IX இன் *1* ஆம் ஒழுங்குவிதியில் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறு சர்வதேசக் காப்பு முகாமைத்துவச் சட்டக்கோவையில் குறித்துரைக்கப்பட்ட இணங்கியொழுகுகை ஆவணத்தை (அல்லது இடைக்கால இணங்கியொழுகுகை ஆவணத்தை) வழங்கியுள்ள நிருவாகத்தின் அல்லது ஒப்பந்தஞ்செய்கின்ற அரசாங்கத்தின் அல்லது ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்பின் பெயர் ஆவணத்தை வழங்குகின்றதல்லாத வேறொன்றாகவிருப்பின் அவ்வாவணம் எந்தக் கணக்காய்வின் அடிப்படையில் வழங்கப்பட்டதோ அந்தக் கணக்காய்வை நிறைவேற்றியுள்ள குழுவின் பெயர்;

(க) கப்பலுக்கு, சமவாயத்தின் அத்தியாயம் IX இன் *1* ஆம் ஒழுங்குவிதியில் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறு சர்வதேசக் காப்பு முகாமைத்துவச் சட்டக்கோவையில் குறித்துரைக்கப்பட்ட காப்பு முகாமைத்துவச் சான்றிதழை (அல்லது இடைக்கால காப்பு முகாமைத்துவச் சான்றிதழை) வழங்கியுள்ள நிருவாகத்தின் அல்லது ஒப்பந்தஞ்செய்கின்ற அரசாங்கத்தின் அல்லது ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்பின் பெயர் சான்றிதழை வழங்குகின்றதல்லாத வேறொன்றாகவிருப்பின் அச்சான்றிதழ் எந்தக் கணக்காய்வின் அடிப்படையில் வழங்கப்பட்டதோ அந்தக் கணக்காய்வை நிறைவேற்றியுள்ள குழுவின் பெயர்;

(ங) கப்பலுக்கு, சமவாயத்தின் அத்தியாயம் XI-*2* இன் *1* ஆம் ஒழுங்குவிதியில் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறு சர்வதேசக் கப்பல் மற்றும் துறைமுக வசதிப் பாதுகாப்புச் சட்டக்கோவையின் பாகம் அ வில் குறித்துரைக்கப்பட்ட சர்வதேசக் கப்பல் பாதுகாப்புச் சான்றிதழை (அல்லது இடைக்காலச் சர்வதேசக் கப்பல் பாதுகாப்புச் சான்றிதழை) வழங்கியுள்ள நிருவாகத்தின் அல்லது ஒப்பந்தஞ்செய்கின்ற அரசாங்கத்தின் அல்லது ஏற்றங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்பு ஒழுங்கமைப்பின் பெயர் சான்றிதழை வழங்குகின்றதல்லாத வேறொன்றாகவிருப்பின், அச்சான்றிதழ் எந்தச் சரிபார்த்தலின் அடிப்படையில் வழங்கப்பட்டதோ அந்தச் சரிபார்த்தலை நிறைவேற்றியுள்ள குழுவின் பெயர்; அத்துடன்

(ச) கப்பலானது எத்திகதியன்று அவ்வரசுடன் பதிவுசெய்யப்படாதொழிந்ததோ அத்திகதி.

(4) உபஒழுங்குவிதி 3 (ஈ) முதல் 3 (1) வரை குறிப்பீடுசெய்யப்பட்ட பதிவீடுகள் தொடர்பான எவையேனும் மாற்றங்கள், அம்மாற்றங்களின் வரலாற்றுடன் சேர்த்து நாளது வரையாக்கப்பட்ட மற்றும் நடப்புத் தகவலை வழங்கும் வகையில் தொடர்ச்சியான பொருட்சுருக்கப் பதிவேட்டில் பதியப்படுதல் வேண்டும்.

(5) உப ஒழுங்குவிதி (4) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட பதிவீடுகள் தொடர்பான எவையேனும் மாற்றங்களின் விடயத்தில், பணிப்பாளர் தலைமையதிபதி, செயல்முறைக்குகந்தவரை இயன்றளவு விரைவாக ஆனால் மாற்றமேற்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குப் பிந்தாமல் இலங்கைக் கொடியைப் பறக்கவிடுவதற்கு உரித்துள்ள கப்பல்களுக்கு ஒன்றில் தொடர்ச்சியான பொருட்சுருக்கப் பதிவேட்டின் அல்லது அதற்கான தோதான திருத்தங்களின் மீளாயப்பட்டதும் நாளதுவரையாக்கப்பட்டதுமான உரையை வழங்குதல் வேண்டும்.

(6) உப ஒழுங்குவிதி (4) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட பதிவீடுகள் தொடர்பான எவையேனும் மாற்றங்களின் விடயத்தில், பணிப்பாளர் தலைமையதிபதி, தொடர்ச்சியான பொருட்சுருக்கப் பதிவேட்டின் மீளாயப்பட்டதும் நாளது வரையாக்கப்பட்டதுமான உரையொன்று வழங்கப்படும்வரை, மாற்றங்களைப் பிரதிபலிப்பதற்குத் தொடர்ச்சியான பொருட்சுருக்கப் பதிவேட்டைத் திருத்தும்படி ஒன்றில் கம்பெனிக்கு அல்லது கப்பற்றலைவருக்கு அதிகாரமளித்தலும் அதனை அல்லது அவரைத் தேவைப்படுத்துதலும் வேண்டும். அத்தகைய விடயங்களில், தொடர்ச்சியானன பொருட்சுருக்கப் பதிவேடு திருத்தப்பட்டுள்ள பின்னர், கம்பெனி, தாமதமின்றி, அதற்கிணங்கப் பணிப்பாளர் தலைமையதிபதிக்குத் தெரிவித்தல் வேண்டும்.

(7) தொடர்ச்சியான பொருட்சுருக்கப் பதிவேடு ஆங்கில மொழியிலிருத்தல் வேண்டும்.

(8) தொடர்ச்சியான பொருட்சுருக்கப் பதிவேடு ஒழுங்கமைப்பினால் அபிவிருத்தி செய்யப்பட்ட படிவத்திலிருத்தல் வேண்டுமென்பதுடன் ஒழுங்கமைப்பினால் அபிவிருத்திசெய்யப்பட்ட வழிகாட்டுநெறிகளுக்கிணங்கப் பேணப்படுதலும் வேண்டும். தொடர்ச்சியான பொருட்சுருக்கப் பதிவேட்டிலான எவையேனும் முன்னைய பதிவீடுகள் திரிபுபடுத்தப்படுதலோ, நீக்கப்படுதலோ அல்லது எவ்வழியிலும் அழித்துவிடப்படுதலோ அல்லது உருக்குலைக்கப்படுதலோ ஆகாது.

(9) கப்பலொன்று இன்னோர் அரசின் கொடிக்குக் கைமாற்றப்படும்போதெல்லாம் அல்லது கப்பலானது இன்னொரு சொந்தக்காரருக்கு விற்பனைசெய்யப்படும்போதெல்லாம் (அல்லது இன்னொரு வெற்றுப்படகு வாடகைக்கமர்த்துநரினால் கையேற்கப்படும்போதெல்லாம்) அல்லது இன்னொரு கம்பெனி கப்பலின் தொழிற்பாட்டுக்கான பொறுப்பை ஏற்கும்போதெல்லாம், தொடர்ச்சியான பொருட்சுருக்கப் பதிவேடு கப்பலில் விட்டுவைக்கப்படுதல் வேண்டும்.

(10) கப்பலொன்று இன்னோர் அரசின் கொடிக்குக் கைமாற்றப்படவுள்ளபோது, கப்பலானது, அவர்களின் நியாயாதிக்கத்தின்கீழ் இருந்து காலப்பகுதியை மேவுகின்ற தொடர்ச்சியான பொருட்சுருக்கப் பதிவேட்டின் பிரதியொன்றை அவ்வரசுக்குப் பணிப்பாளர் தலைமையதிபதி அனுப்பிவைப்பதனை இயலச்செய்யும்வகையில் அக்கப்பலானது எந்த அரசின் கொடியின்கீழ் கைமாற்றப்படவுள்ளதோ அந்த அரசின் பெயரைக் கம்பெனியானது பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தல் வேண்டும்.

(11) எந்த இன்னோர் அரசின் அரசாங்கம் ஓர் ஒப்பந்தஞ்செய்கின்ற அரசாங்கமாகவுள்ளதோ அந்த இன்னோர் அரசின் கொடிக்குக் கப்பலொன்று கைமாற்றப்படும்போது இதுவரையான பணிப்பாளர் தலைமையதிபதி, கைமாற்றம் இடம்பெற்றபின்னர் இயன்றளவு விரைவாக அவ்வரசின் அரசாங்கத்துக்கு, கப்பலானது இலங்கையின் நியாயாதிக்கத்தின்கீழ் இருந்த காலப்பகுதியை மேவுகின்ற இயைபான தொடர்ச்சியான பொருட்சுருக்கப் பதிவேட்டின் பிரதியை, வேறு அரசுகளினால் கப்பலுக்கு முன்னர் வழங்கப்பட்ட எவையேனும் தொடர்ச்சியான பொருட்சுருக்கப்பதிவேடுகளுடன் சேர்த்து அனுப்புதல் வேண்டும்.

(12) கப்பலொன்று இலங்கைக் கொடிக்குக் கைமாற்றப்படும்போது, பணிப்பாளர் தலைமையதிபதி, முன்னைய தொடர்ச்சியான பொருட்சுருக்கப் பதிவேடுகளைத் தொடர்ச்சியான பொருட்சுருக்கப் பதிவேட்டுடன் இணைத்தல் வேண்டுமென்பதுடன் பணிப்பாளர் தலைமையதிபதி, இவ்வொழுங்குவிதியினால் உட்கருதப்பட்ட தொடர்ச்சியான வரலாற்றுப் பதிவேட்டை வழங்கும்வகையில் அதனைக் கப்பலுக்கு வழங்குவார்.

(13) மூலத் தொடர்ச்சியான பொருட்சுருக்கப் பதிவேடு கப்பலின் ஆயுட்காலம் பூராகவும் அதில் வைத்திருக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் எல்லா நேரங்களிலும் சோதனைக்குக் கிடைக்கக்கூடியதாக்கப்படுதலும் வேண்டும்.

7\. (1) 2261/49 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2021 வணிகக் கப்பற்றொழில் (ஆய்வுகளும் சான்றிதழ்களும்) ஒழுங்குவிதிகள் ஏற்புடையனவாகவேண்டிய ஒவ்வொரு கப்பலும் தோதான காவத்தக்க வளிமண்டலப் பரீட்சிப்புச் சாதனமொன்றைக் கொண்டுசெல்லுதல் வேண்டும். குறைந்த பட்சமாக, அடைக்கப்பட்ட இடங்களினுள் பிரவேசிக்கு முன்னர் ஒட்சிசன், பற்றி எரியத்தக்க வாயுக்கள் அல்லது ஆவிகள், ஐதரசன் சல்பைட் மற்றும் கார்பன் மொனொக்ஸை

ட் என்பவற்றின் செறிவுகளை அளவீடுசெய்வதற்கு இது இயன்றதாதல் வேண்டும். ஏனைய தேவைப்பாடுகளின்கீழ் கொண்டுசெல்லப்படும் சாதனங்கள் இந்த ஒழுங்குவிதியைத் திருப்திப்படுத்தலாம். அத்தகைய எல்லாச் சாதனங்களினதும் அளவுத்திருத்தத்துக்காகப் பொருத்தமான வழிவகைகள் ஏற்பாடுசெய்யப்படுதல் வேண்டும்.

(2) உப ஒழுங்குவிதி (1) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட தோதான காவத்தக்க வளிமண்டலப் பரீட்சிப்புச் சாதனத்தை அல்லது சாதனங்களைத் தெரிவுசெய்தலானது, ஒழுங்கமைப்பினால் அபிவிருத்திசெய்யப்பட்ட வழிகாட்டுநெறிகளின் தோதான ஏற்பாடுகளுக்கிணங்கவிருத்தல் வேண்டும்.

## பாகம் III

## பொது ஏற்பாடுகள்

8. இலங்கையில் ஏதேனும் துறைமுகத்தில் அல்லது இடத்தில் இருக்கின்ற ஏதேனும் கப்பல், அத்தகைய கப்பலின் உடற்கோப்பு, சாதனங்கள், எந்திரத்தொகுதி, குறைவான ஆளமர்த்துகை, மிகைச்சுமையேற்றல் அல்லது முறையற்ற சுமையேற்றல் அல்லது சமவாயத்துக்கு ஒத்ததாகவிராத வேறேதேனும் நிபந்தனை காரணமாகக் காப்பற்ற கப்பலொன்றாகக் காணப்பட்டு, அத்தகைய கப்பல் எந்தச் சேவைக்காக உட்கருதப்படுகின்றதோ அந்தச் சேவையின் தன்மையைக் கருத்திற்கொண்டு மனித உயிருக்குப் பாரிய சேதம்விளைவிக்காமல் கடலுக்குச் செல்வதற்குத் தகுதியற்றதாகவிருக்குமிடத்து, அத்தகைய கப்பல் ஆய்வுசெய்யப்படும் அல்லது குறைபாடுள்ள நிலைமையை நிவர்த்திசெய்யும் நோக்கத்துக்காகத் தற்காலிகமாகத் தடுத்துவைக்கப்படலாம்.

9. பணிப்பாளர் தலைமையதிபதி, அமைச்சரின் ஒருப்பாட்டுடன், இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை நடைமுறைப் படுத்துவதற்காகத் தேவைப்படக்கூடியவாறாகச் சமவாயத்தின் அல்லது 1988 ஆம் ஆண்டின் வரைவாவணத்தின் ஏற்பாடுகளினது குறைந்தபட்சத் தொழினுட்ப நியமங்களுக்கு இணங்கியொழுகுவதற்கான அத்தகைய நடைமுறைப்படுத்தல் நியமங்களை வழங்கலாம்.

10. இவ்வொழுங்குவிதிகளில் -

“நிருவாகம்” என்பது, படகானது எந்த அரசின் கொடியைப் பறக்கவிடுவதற்கு உரித்துள்ளதோ அந்த அரசின் அரசாங்கம் என்று பொருளாகும் ;

“தொகையாக ஏற்றிச்செல்லும் கப்பல்” என்பது, தனி மேற்றளத்துடனும், சரக்கிடங்களில் மேற்பக்கத் தாங்கிகளுடனும் துள்ளும் பக்கத் தாங்கிகளுடனும் பொதுவாக நிர்மாணிக்கப்பட்டதும், உலர்சரக்கைத் தொகையாக ஏற்றிச்செல்வதற்குப் பிரதானமாக உட்கருதப்பட்டதுமான ஒரு கப்பல் என்று பொருளாகுமென்பதுடன் தாது ஏற்றிச்செல்லும் கப்பல்களும் இணைந்த ஏற்றிச்செல்லும் கப்பல்களும் போன்ற அத்தகைய வகைகளையும் உள்ளடக்கும் ;

“கம்பெனி” என்பது, கப்பலின் சொந்தக்காரர் அல்லது கப்பலின் தொழிற்பாட்டுக்கான பொறுப்பைக் கப்பலின் சொந்தக்காரரிடமிருந்து ஏற்றுள்ளதும் அல்லது ஏற்றுள்ளவரும், அத்தகைய பொறுப்பை ஏற்றதன்மீது சர்வதேசக் காப்பு முகாமைத்துவச் சட்டக்கோவையினால் சுமத்தப்பட்ட எல்லாக் கடமைகளையும் பொறுப்புக்களையும் கையேற்பதற்கு உடன்பட்டுள்ளதும் அல்லது உடன்பட்டுள்ளவருமான வேறேதேனும் ஒழுங்கமைப்பு அல்லது முகாமையாளர் அல்லது வெற்றுப்படகு வாடகைக்கமர்த்துநர் என்று பொருளாகும்;

“சகஒ” என்பது, சர்வதேசக் கடலோர ஒழுங்கமைப்பு என்று பொருளாகும்;

“சர்வதேசக் காப்பு முகாமைத்துவச் சட்டக்கோவை” என்பது, ஒழுங்கமைப்பினால் திருத்தப்படக்கூடியதும், 1974 ஆம் ஆண்டின் கடலில் உயிர்காப்புக்கான சர்வதேசச் சமவாயத்துக்கான ஒப்பந்தஞ்செய்கின்ற அரசாங்கங்களினது மாநாட்டின் 2 ஆம் தீர்மானத்தினால் 2002, திசெம்பர் 12 ஆந் திகதியன்று ஏற்றுக்கொள்ளப்பட்டவாறானதும், பாகம் அ (அதன் ஏற்பாடுகள் கட்டாயமானவையாகக் கொள்ளப்படுதல் வேண்டும்) மற்றும் பாகம் ஆ (அதன் எற்பாடுகள் விதப்புரையானவையாகக் கொள்ளப்படுதல் வேண்டும்) என்பவற்றைக் கொண்டுள்ளதுமான கப்பல்களின் பாதுகாப்பு மற்றும் துறைமுக வசதிகளுக்கான சர்வதேச கப்பல் மற்றும் துறைமுக வசதிப் பாதுகாப்புச் சட்டக்கோவை என்று பொருளாகும்;

“ஒழுங்கமைப்பு” என்பது, சர்வதேசக் கடலோர ஒழுங்கமைப்பு என்று பொருளாகும்;

EOG 09 - 0242

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.